# பாடத்திட்டம் - மிருதங்கம்

சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையம்

நோர்வே **05.01.2020**

இப்பாடத்திட்டமானது நோர்வே வாழ் மிருதங்க ஆசிரியர்களால் நெறிப்படுத்தப்பட்டு தொகுக்கப்பட்டது. இத்திட்டம் எட்டுத் தரங்களாகப் பிரித்து அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் (2010) பின்வருவோரினால் நோர்வே நுண்கலை மன்றத்திற்காக தொகுக்கப்பட்ட பாடத்திட்டமானது, 2019 இல் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையத்தின் (International Tamil Fine Arts Innovation Center – ITAC) அடைவுத்திட்ட ஆக்கத்தேவைக்கமைய ஆசிரியர் குழுவொன்றினால் இப்பாடவிதானம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

**பாடத்திட்ட உருவாக்கம் 2010**

**ஆசிரியர்:**

பல்கலைவேந்தன் திரு. கணேசன் சுந்தரமூர்த்தி (குட்டிமாஸ்டர்)
அதிபர், நாதாந்தம் பல்கலை மன்றம்
ஆசிரியர், Oslo musikk- og kulturskole

**நிபுணத்துவ ஆலோசனை (இலங்கை)**

தண்ணுமை வேந்தன் திரு.எம். சிதம்பரநாதன்
முன்னாள் விரிவுரையாளர்: இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**2019 மீளாய்வுக்குழுவில் பங்கெடுத்தோர்:**

பல்கலைவேந்தன் திரு. கணேசன் சுந்தரமூர்த்தி (குட்டிமாஸ்டர்)
அதிபர், நாதாந்தம் பல்கலை மன்றம்
ஆசிரியர், Oslo musikk- og kulturskole

முனைவர் சுயம்பு ஹரிஹரன் (PhD in Music)

மிருதங்க ஆசிரியர் ஜெயராசன் இராசநாதன்

## தரம் ஒன்று:

**செய்முறை (வாசிப்பும் வாய்மொழிதலும்):**

1. தா தீ தோம் நம் பயிற்சி (6 விதம்)
2. தாகிட தீகிட தோம்கிட நம்கிட (பயிற்சி 4 - விதங்கள்)
3. தரிகிட பயிற்சி ((பயிற்சி 4 - விதங்கள்)
4. தரிகிட, கிட பயிற்சி (பயிற்சி 4 - விதங்கள்)
5. 8-அட்சரப் புரட்டல் - ஆதி தாளம்
6. 12-அட்சரப் புரட்டல் - ரூபக தாளம்
7. 16-அட்சரப் புரட்டல் - ஆதி தாளம்
8. 24-அட்சரப் புரட்டல் - ரூபக தாளம்.
9. ஆதி தாளத்தில் ஒரு ஆவர்த்தன “தகஜணு”, “தளாங்கு”, “தரிகிட” பயிற்சிகள்.
10. ஆதி தாளத்தில் இரண்டு ஆவர்த்தன “தகஜணு” “தளாங்கு” “தரிகிட” பயிற்சிகள்

## தரம் இரண்டு:

தரம் 01 பாடவிதானம் (இப் பாடவிதானத்தில் முழுமையான கற்றறிவு இருத்தலுடன் கீழ்க்கண்ட தரம் இரண்டிற்கான பாடங்களையும் கற்றறிந்து தேர்வுகளில் கேட்கப்படுபவற்றை ஒப்படை செய்யும் தகமை இருத்தல் வேண்டும்.)

### செய்முறை (வாசிப்பும் வாய்மொழிதலும்):

1. 4 நிமிடத்திற்குக் குறையாமல் ஆதி தாளத்தில் தனியாவர்த்தனம்
2. 32 அட்சரப் புரட்டல் - ஆதி தாளம்
3. 72 அட்சரப் புரட்டல் - ஆதி தாளம், ரூபக தாளம்

## தரம் மூன்று:

தரம் 01 - 02 பாடவிதானம் (குறிப்பிட்ட கீழ்வகுப்புகளிற்கான பாடவிதானங்களில் முழுமையான கற்றறிவு இருத்தலுடன் கீழ்க்கண்ட தரம் மூன்றிற்கான பாடங்களையும் கற்றறிந்து தேர்வுகளில் கேட்கப்படுபவற்றை ஒப்படை செய்யும் தகமை இருத்தல் வேண்டும்.)

செய்முறைத் தேர்வுகளில் வாய்ப்பாட்டு நேர்முகமாகப் பாடப்படும்.

**செய்முறை (வாசிப்பும் வாய்மொழிதலும்):**

1. ஐந்து நிமிடங்களிற்குக் குறையாமல் ரூபக தாளத்தில் தனியாவர்த்தனம் வாசித்தல்.

2. ஆதி தாளத்தில் அமைந்த ஒரு கீர்த்தனை / கீதம் பாடும்போது அதற்கு மிருதங்கம் வாசித்தல்.

3. பின்வரும் தாளங்களின் பஞ்ச (5) ஜாதி ததிங்கிணதொம் வரிசைகளை வாசிக்கக்கூடிய தகைமை.

   அ. - ஆதி
   ஆ. - ரூபகம்

**அறிமுறை (எழுத்துத்தேர்வு):**

1. 7 தாளங்களின் விபரம்.

2. தாளங்களின் உற்பத்தி, வரைவிலக்கணம் பற்றிய சிறிய விளக்கம் (புரரண வரலாறு)

3. திரியாங்கம், அட்சரம், ஆவர்த்தனம், தனி ஆவர்த்தனம் பற்றிய சுருக்கமான விளக்கம்.

## தரம் நான்கு:

தரம் 01 – 03 பாடவிதானம் (குறிப்பிட்ட கீழ்வகுப்புகளிற்கான பாடவிதானங்களில் முழுமையான கற்றறிவு இருத்தலுடன் கீழ்க்கண்ட தரம் நான்கிற்கான பாடங்களையும் கற்றறிந்து தேர்வுகளில் கேட்கப்படுபவற்றை ஒப்படை செய்யும் தகமை இருத்தல் வேண்டும்.)

செய்முறைத் தேர்வுகளில் வாய்ப்பாட்டு நேர்முகமாகப் பாடப்படும்.

### செய்முறை (வாசிப்பும் வாய்மொழிதலும்):

1. பின்வரும் தாளங்கள் ஒவ்வொன்றிற்கும் 5 நிமிடங்களுக்குக் குறையாமல் தனி ஆவர்த்தனம் வாசித்தல்.

   அ. மிஸ்ர சாப்பு

   ஆ. கண்ட சாப்பு

2. பின்வரும் தாளங்களின் பஞ்ச (5) ஜாதி ததிங்கிணதொம் வரிசைகளை வாசிக்கக்கூடிய தகமை.

   அ. - மிஸ்ரசாப்பு

   ஆ. - கண்டசாப்பு

3. பாடப்படும் இரண்டு (ஆதி, ரூபகம்) கீர்த்தனைகளுக்கு மிருதங்கம் வாசித்தல்.

### அறிமுறை (எழுத்துத்தேர்வு):

1. மிருதங்க வாத்தியத்தின் பகுதிகளைக் குறிப்பிட்டு வரையும் ஆற்றல் பெற்றிருத்தல்
2. 35 தாளங்கள், 175 தாளங்கள் உருவானமை பற்றிய விளக்கம்.
3. ஜதி, ஜாதி, நடை, சர்வலகு, அட்சரம், மாத்திரை, காலம், சுருதி, ஸ்வரம், லயம், என்பவற்றின் விளக்கம்.

4. ஆறு அங்கங்களும் (ஷடாங்கம்) அவற்றின் குறியீடுகளும்.

5. ஆதி, ரூபகம், மிஸ்ரசாப்பு, கண்டசாப்பு போன்ற தாளங்களுக்கு மாத்திரைகள் கண்டுபிடித்தல்.

6. கீர்த்தனை பற்றிய அறிவு.

## தரம் ஐந்து:

தரம் 01 – 04 பாடவிதானம் (குறிப்பிட்ட கீழ்வகுப்புகளிற்கான பாடவிதானங்களில் முழுமையான கற்றறிவு இருத்தலுடன் கீழ்க்கண்ட தரம் ஐந்திற்கான பாடங்களையும் கற்றறிந்து தேர்வுகளில் கேட்கப்படுபவற்றை ஒப்படை செய்யும் தகமை இருத்தல் வேண்டும்.)

செய்முறைத் தேர்வுகளில் வாய்ப்பாட்டு நேர்முகமாகப் பாடப்படும்.

### செய்முறை (வாசிப்பும் வாய்மொழிதலும்):

1. பாடப்படும் தில்லானா, இரண்டு திருப்புகழ் என்பவற்றிற்கு வாசித்தல்.
2. ஆதி தாளத்தில் 5 நடைகள் வாசித்தல்.
3. ஆதி, ரூபகம், மிஸ்ரசாப்பு, கண்டசாப்பு தாளங்களில் கோர்வைகள் வாசித்தல்.
4. ஆதி, ரூபகம், மிஸ்ரசாப்பு, கண்டசாப்பு போன்ற தாளங்களுக்குத் தீர்மானங்கள் கண்டுபிடித்து வாசித்தல்.

### அறிமுறை (எழுத்துத்தேர்வு)

1. சங்கீதக் குறியீடுகளை உதாரணங்களுடன் விளக்குதல்.
   (, : / // போன்றவை)
2. கிரகம் (எடுப்பு) பற்றிய சிறிய விளக்கம் உதாரணங்களுடன்.
3. ஆதி அல்லது ரூபக தாளத்தில் யாதேனும் 2 கோர்வைகள் எழுதத் தெரிதல் வேணடும்.
4. ஆதி, ரூபகம், மிஸ்ரசாப்பு, கண்டசாப்பு போன்ற தாளங்களுக்குத் தீர்மானங்கள் கண்டுபிடித்து எழுதுதல்.
5. தில்லானா, ஜதீஸ்வரம், திருப்புகழ் போன்றவை பற்றிய அறிவு.

## தரம் ஆறு:

தரம் 01 – 05 பாடவிதானம் (குறிப்பிட்ட கீழ்வகுப்புகளிற்கான பாடவிதானங்களில் முழுமையான கற்றறிவு இருத்தலுடன் கீழ்க்கண்ட தரம் ஆறுக்கான பாடங்களையும் கற்றறிந்து தேர்வுகளில் கேட்கப்படுபவற்றை ஒப்படை செய்யும் தகமை இருத்தல் வேண்டும்.)

செய்முறைத் தேர்வுகளில் வாய்ப்பாட்டு நேர்முகமாகப் பாடப்படும்.

**செய்முறை (வாசிப்பும் வாய்மொழிதலும்):**

1. ஆதி தாளத்தில், திஸ்ர கதியில் தனியாவர்த்தனம் வாசித்தல். ஐந்து நிமிடங்களுக்குக் குறையாமல் அமைந்திருத்தல் வேண்டும்.
2. ஒரு வர்ணம், பஜனைப் பாடல், நாட்டார் பாடல் போன்றவற்றிற்கு வாசித்தல்.
3. கண்டஜாதி திரிபுடை தாளத்தில் தனியாவர்த்தனம் வாசித்தல். ஐந்து நிமிடங்களுக்குக் குறையாமல் அமைந்திருத்தல் வேண்டும்.
4. மிஸ்ரஜாதி திரிபுடை தாளத்தில் தனியாவர்த்தனம் வாசித்தல். ஐந்து நிமிடங்களுக்குக் குறையாமல் அமைந்திருத்தல் வேண்டும்.

**அறிமுறை (எழுத்துத்தேர்வு):**

1. கண்டஜாதி திரிபுடை தாளம், மிஸ்ரஜாதி திரிபுடை தாளம் போன்றவற்றில், இரண்டு ஆவர்த்தனங்களுக்குக் குறையாமல் கோர்வைகள் அமைக்கத் தெரிந்திருத்தல்.
2. ஆதி, ரூபகம், மிஸ்ர சாப்பு, கண்ட சாப்பு ஆகிய தாளங்களிற்கான "ததிங்கிணதொம்" பாடங்களைக் குறியீட்டுடன் எழுதுதல்.
3. இசைக் கருவிகளின் பிரிவுகள் பற்றிய அறிவு (தந்தி, துளை, தோல் வாத்தியம், கஞ்சற்கருவி...)
4. வாய்ப்பாட்டுக் கச்சேரிக்கும் வாத்தியக் கச்சேரிக்கும் (கருவி இசைக் கச்சேரிக்கும்) மிருதங்கம் வாசிக்கும் முறை.
5. வர்ணம், நாட்டார் பாடல் பற்றிய அறிவு.

## நிபுணத்துவச் சான்றிதழுக்கான தரம் (Diploma):

தரம் 01 – 06 பாடவிதானம் (குறிப்பிட்ட கீழ்வகுப்புகளிற்கான பாடவிதானங்களில் முழுமையான கற்றறிவு இருத்தலுடன் கீழ்க்கண்ட Diploma தரத்திற்கான பாடங்களையும் கற்றறிந்து தேர்வுகளில் கேட்கப்படுபவற்றை ஒப்படை செய்யும் தகமை இருத்தல் வேண்டும்.)

செய்முறைத் தேர்வுகளில் வாய்ப்பாட்டு நேர்முகமாகப் பாடப்படும்.

**செய்முறை (வாசிப்பும் வாய்மொழிதலும்):**

1. கண்டதிரிபுடை அல்லது திஸ்ரதிரிபுடை அல்லது சதுஸ்ர திரிபுடை தாளத்தில் இரண்டு களையில் பல்லவி ஒன்றை அமைத்து, மூன்று காலத்தில் (திஸ்ரகதியுடனும்) வாசித்தல்.

2. மூன்று கதிகள் (சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம்) கலந்த தனியாவர்த்தனம் 7 நிமிடங்களிற்குக் குறையாமல் வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

3. ஒரு ஆதி தாள வர்ணம், ஒரு அட தாள வர்ணம், ஒரு பஞ்சரத்ன கீர்த்தனை, தில்லானா, ஒரு விளம்பகாலக் கிருதி (சௌக்ககாலக் கிருதி) என்பவற்றிற்கு வாசித்தல்.

**அறிமுறை (எழுத்துத்தேர்வு):**

1. மிருதங்கம், கஞ்சிரா, கடம், மோர்சிங், டொலக், தவில், தப்லா ஆகிய வாத்தியங்களின் அமைப்புப்பற்றிய விளக்கமும் அவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமையும் வேற்றுமையும்.

2. ஏதாவது ஒரு பாடத்தை அல்லது கோர்வையை 3 காலப்படுத்தி ஜதிகள் மாத்திரைக் கணக்குடன் எழுதுதல்.

3. கச்சேரிகளில் மிருதங்கம் மற்றும் உப-தாளவாத்தியங்கள் (கஞ்சிரா, கடம், மோர்சிங்) வாசிக்கும் முறை பற்றிய விளக்கம்.

4. கர்நாடக சங்கீதத்தின் சுருதி அளவும் அதற்கு ஒத்த மேற்கத்திய இசையின் சுருதி அளவும் பற்றிய அறிவு.

5. பல்லவி, பஞ்சரத்ன கீர்த்தனைகள் பற்றிய அறிவு.

## ஆசிரியர் தரம்:

**செய்முறை (வாசிப்பும் வாய்மொழிதலும்):**

ஒரு முழுமையான இசைக்கச்சேரிக்கு வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

**கற்பித்தல்:**

- 40 நிமிட வகுப்பு ஒன்றிற்கான பாட ஆயத்தமும், பாடம் நடாத்தும் திறனும் பெற்றிருத்தல் வேண்டும்.

**அவைக்காற்றுகை:**

- ஒரு முழுமையான கச்சேரிக்குரிய வர்ணம், கீர்த்தனை, நிரவல், ஸ்வரம், முக்கிய உருப்படி (பல்லவி / விளம்பகாலக் கிருதி) ஆகியவற்றிற்கு வாசிப்பதைத் தொடர்ந்து ஐந்து கதி (நடை) கலந்த தனியாவர்த்தனம் வாசித்தல். தொடர்ந்து தில்லானா, திருப்புகழுடன் நிறைவுபெறல்.

- இதை ஒரு மேடை நிகழ்ச்சியாகப் பக்கவாத்தியங்களுடனும் பாடகருடனும் அவையோர் முன்னிலையில், அரங்கில் நிகழ்த்த வேண்டும். இந் நிகழ்வு 60 நிமிடங்களுக்குக் குறையாமலும் 75 நிமிடங்களுக்குக் கூடாமலும் அமைய வேண்டும்.

**ஆய்வுக்கட்டுரை:**

- ஆய்வுக்கட்டுரை இருபத்தைந்து பக்கங்களிற்குக் குறையாது எழுதப்படல் வேண்டும். சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையத்தினருடன் (ITAC) கலந்துரையாடி, கட்டுரையின் தலைப்பு மற்றும் உள்ளடக்கம் வேறோருவராலோ அல்லது வேறு நிறுவனத்தினாலோ ஆய்வுக்கு உட்படாத ஒன்றாக தெரிவு செய்தல் வேண்டும். உள்ளடக்கம் சுயமானதாக அமைதல் வேண்டும்.

- அண்ணளவாகப் பரீட்சைக்கு 6 மாதங்களிற்கு முன்பு சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையத்தினருடன் கலந்துரையாடி கட்டுரையின் தலைப்பினைத் தெரிவெடுத்தல் வேண்டும்.

- ஆய்வுக்கட்டுரையை அறிமுகப்படுத்தத் தெரிந்திருப்பதுடன் பரீட்சைக்குழுவினரால் தொடுக்கப்படும் வினாக்களிற்குப் பதிலளிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

- கட்டுரை எழுதும்போது அதன் அமைப்பு நடைமுறையிலுள்ள வரைவிலக்கணக் கட்டமைப்புக்குள் அமைய வேண்டும். குறைந்தபட்சம் முகப்பு (forside), முன்னுரை (forord), பொருளடக்கம் (உள்ளடக்கம், innholdsfortegnelse), தொடக்கவுரை (innledning), பொருளுரை (hovedtekst), முடிவுரை (avslutning), உசாத்துணை நூல்கள் (referanseliste) என்பவற்றுடன், நூற்சான்றுக் குறியீடுகளையும் கொண்டிருக்க வேண்டும். சார்புப் படங்களும் இணைக்கப் படலாம்.

**தகமைகள்:**

- ஆசிரியர் தரத்துக்குத் தோற்றும் மாணவர் ஏழாவது தர எழுத்து, செயன்முறைத் தேர்வுகளில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- அடிப்படைக்கல்வியான 10ஆவது தரத்தினைப் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

*ஆசிரியர் பயிற்சித்தரமாக அமையும் இத்தரத்தை பூர்த்தி செய்யும் ஒரு மாணவர் சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையத்தின் பட்டத்தை பெறும் தகுதியை பெறுவதுடன் உரிய கலைப்பாடத்தினை மாணவ சமுதாயத்திற்குப் பயிற்றுவிக்கும் தகமையையும் அடைந்துகொள்கின்றார்.*